பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 7 (20—6—68) வியாழன் ★ வெளியூர்: ஆனி 8 (21—6—68) வெள்ளி [இதழ்: 5

# குடிசையிழந்த மக்கட்குப் புதிய குடியிருப்பு

## ஓடு வேய்ந்த கூரையுடன் குறைந்த செலவில் திட்டம்

### மாதிரி வீட்டை அறிஞர் அண்ணா பார்வையிட்டார்

சென்னை, ஜூன் 20—

தீ விபத்தால் பாதிக்கப்பட்டு வீடிழந்து தவிக்கும் மக்களுக்குப் புதிய வீடுகள் கட்டித்தரும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய ரக மாதிரி வீட்டை முதலமைச்சர் அண்ணா அவர்கள் நேற்று பார்வையிட்டார்கள்.

அந்த வீட்டில் மேலும் சில மாறுதல்கள்--வசதிகள் செய்வது குறித்து அதிகாரிகளுடன் அண்ணா அவர்கள் கலந்து பேசினார்கள்; சில ஆய்வுரைகளையும் தெரிவித்தார்கள்.

தமிழக அரசின் பொதுப் பணித் துறையால் சென்னைத் தலைமைச் செயலகத்தில் இந்த 'மாதிரி வீடு' அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முதலமைச்சர் அண்ணாவின் அனுமதி கிடைத்ததும், வீடிழந்த குடிசைவாசிகட்கும் இம்மாதிரியான வீடுகள் கட்டித்தரப்படும் என்று தெரிகிறது.

எங்கெங்கே, எவ்வளவு வீடுகளை கட்டுவது என்பது குறித்து இனிமேல்தான் அரசு முடிவு செய்யும்.

இந்த வீட்டின் கூரை, சவுக்கு மரங்களைக் கொண்டு கட்டப்பட்டு மங்களூர் ஓடுகளால் வேயப்பட்டுள்ளது.

8'×12' பரப்பளவில் வீடு அமைந்துளது. வீட்டுக்கான சுவரை, மண்ணாலோ செங்கற்களினாலோ அவரவர்கள் விருப்பம் போல் கட்டிக்கொள்ளலாம்.

## அமைச்சர் சத்தியவாணிமுத்து உதவிப் பணம் வழங்கினார்

சென்னை, ஜூன் 20—

சென்னைத் தீ விபத்தில் வீடு இழந்தவர்களுக்குத் தமிழக அரசு வழங்கிய உதவித் தொகையை அரிசன நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து வழங்கினார்.

வியாசர்பாடி திரு. வி. க. நகர் பகுதியில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

மொத்தம் 105 குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 20 வழங்கப்பட்டது.

அமைச்சர் சத்தியவாணிமுத்து பேசுகையில் கூறியதாவது:—

"மாதம் ரூ. 50-க்குக் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்கட்கு இன்று உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாத வருமானத்தைப் பற்றிக் கருத்தில் கொள்ளாமல் தீயினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உதவித் தொகை வழங்க அரசு உத்தரவிட்டிருக்கிறது; இந்த உதவித் தொகை இன்னும் இரண்டொரு நாட்களில் வழங்கப்படும்.

### பாய்கள் வழங்கினார்

வியாசர்பாடி மோகன மில் பகுதிகளில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று காலை அமைச்சர் சத்தியவாணிமுத்து, பாய்கள் வழங்கினார்; ஏறத்தாழ 350 குடும்பங்களுக்கு பாய்கள் கொடுக்கப்பட்டது.

## நெல் --- அரிசி எடுத்துச் செல்லலாம்

### தஞ்சை மாவட்டத்தில் தடை நீக்கம்

தஞ்சை, ஜூன், 20—

தஞ்சை மாநிலத்தில் தாலுகாக்களிடையே நெல், அரிசி நடமாட்டங்கள் கட்டுப்பாடு நீக்கப்படடுள்ளது.

இது சம்பந்தமான உத்தரவை கலெக்டர் பிறப்பித்துள்ளார்.

மாவட்டத்தில் சம்பா அறுவடைக் காலத்தில் 2.36 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் 1.87 இலட்சம் டன் சென்னை, கோவை, கன்னியாகுமரி போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறுவை சாகுபடிக்கு ஏ. டி. டி. 27 ரக நெல்லைப் பயிரிடுவதில் மாவட்ட விவசாயிகள் அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

விதைகள், இரசாயன உரங்கள் வழங்குவதற்கும், கடன் வசதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## சேலத்தில் உருக்காலை அமைக்க உதவும் திட்டம்

### செயல்படுத்த முன்வருகிறது ஜப்பானிய நிறுவனம்

#### தமிழக அரசு முயற்சிக்கு டில்லி அனுமதி கிட்டுமா?

டோக்கியோ, ஜூன் 17—

சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கும் அயல்நாட்டுச் செலாவணியைக் கொண்டு சேலத்தில் உருக்காலை அமைக்கும் தமிழக அரசின் திட்டம் பற்றி மேல் விவரம் இப்போது கிடைத்துள்ளது.

மாருபெனி என்கிற பெரிய ஜப்பானிய நிறுவனமொன்று இது பற்றிய விவரங்களை அண்ணா அவர்கள் ஜப்பான் சென்றிருந்தபோது அவரிடம் தெரிவித்திருந்தது.

சேலம் கஞ்சமலைப் பகுதியில் 10 கோடி டன் இரும்புக் கனி கிடைக்கும்; அங்கேயே இரும்பைத் தனியாகப் பிரித்தெடுக்க ஏற்பாடு செய்வதென்பது மாருபெனி நிறுவனத்தின் திட்டம்.

சேலத்திலிருந்து சென்னைத் துறைமுகம் அருகில் இருப்பதும் இரும்புக் கனி ஏற்றுமதி செய்யச் சென்னைத் துறைமுகத்தில் தனி வசதிகள் செய்யப்படவிருப்பதும் ஜப்பான் நிறுவனத்தைக் கவர்ந்துள்ளன.

இரும்பு வெட்டியெடுக்கப்படும் இடத்திலிருந்து சேலம் நகர் இரண்டே கல் தொலைவில் உள்ளது. சேலத்திலிருந்து சென்னைக்கு இரயில் வசதி இருக்கிறது.

மாருபெனி நிறுவனத்தின் திட்டப்படி ஆண்டுக்கு 8 இலட்சம் டன் இரும்புக் கனியை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

ஜப்பானிலுள்ள உருக்காலைகளுடன் மாருபெனி நிறுவனம், இரும்பைப் பயன்படுத்துவது பற்றிப் பேச்சு நடத்திவருகிறது.

இந்திய அரசிடம் மாருபெனி நிறுவனம் ஒரு திட்டம் தந்துள்ளது. இந்திய அரசின் அனுமதியும், தமிழக அரசின் ஒப்புதலும் கிடைப்பதற்காக அந்த நிறுவனம் இப்போது காத்திருக்கிறது.

## மத்திய அரசில் கருத்து வேற்றுமை

### உருக்கு--நிலக்கரி விலைகளை உயர்த்துவதற்கு எதிர்ப்பு

#### முடிவெடுக்காமலே துணைக் குழுக் கூட்டம் முடிந்தது

புதுடில்லி, ஜூன் 19—

உருக்கு - நிலக்கரி விலைகளை உயர்த்துவது தொடர்பான பிரச்சினையில் மத்திய அரசின் அமைச்சர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

உருக்கு - நிலக்கரி ஆகியவற்றின் உற்பத்தி, ஏற்றுமதி விலைகளை மறு ஆய்வு செய்வதற்கென அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவைத் துணைக் குழு, கருத்து வேற்றுமை காரணமாக எந்த முடிவையும் செய்ய முடியவில்லை.

இறக்குமதி செய்யக்கூடிய அம்மோனியத்தை மித்தாபூரில் உற்பத்தி செய்யும் வகையில் டாட்டா நிறுவனம் உருவாக்கியுள்ள மிகப் பெரிய உரத் தொழிற்சாலைத் திட்டம் குறித்தும் மேற்படி குழு ஒரு முடிவுக்கும் வரவில்லை. இந்தப் பிரச்சினை ஜூலை 2-ஆம் நாள் நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது.

உருக்கு விலை நிர்ணயப் பிரச்சினையைக் கூட்டுத் தொழிற்சாலை ஆய்வுக் குழுவின் ஆய்வுக்குவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரும்பொருட் கட்டுப்பாடுகள் நீக்கப்படமாட்டாது என்பது இதன்மூலம் தெளிவாகிறது. அமைச்சரவைத் துணைக் குழு, உருக்குத் தகடுகளின் விலைகளைக் குறைப்பது பற்றி விவாதித்த போதிலும், உருக்குப் பாளங்கள், கம்பிகள் ஆகியவற்றின் விலைகளைக் குறைக்க விரும்பியதாகத் தெரியவில்லை.

நிலக்கரி விலையை உயர்த்துவதற்கு, இரயில்வே அமைச்சர் திரு. பூனச்சா எதிர்ப்புத் தெரிவித்தார்.

மொரார்ஜி தேசாயைத் துணைத் தலைவராகக் கொண்ட இத் துணைக் குழுவின் கூட்டத்தில் அமைச்சர்கள் பக்ருதீன் அலி அகமது, அசோக் மேத்தா, ஜெய்சுக்லால் ஹாத்தி, தினேஷ் சிங், பி. சி. சேத்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தென்காசி இடைத் தேர்தல்

### கழக வேட்பாளருக்கு ச. சோ. கட்சி ஆதரவு

திருச்சி, ஜூன் 20—

தென்காசித் தொகுதி சட்ட மன்றத் தொகுதி இடைத் தேர்தலில், தி. மு. கழக வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பதென சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாடு சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. எம். மீனாட்சிசுந்தரமும், பொதுச்செயலாளர் திரு. கே. ஆர். நல்லசிவமும் இத்தகவலைத் தெரிவித்தனர்.

### தென்காசித் தொகுதி தி.மு.க. வேட்பாளர்



கா. மு. கதிரவன்

## இனிப்புப் பண்டத்தில் நஞ்சு!

### 53 பேர் மருத்துவமனையில் அனுமதி

சென்னை, ஜூன் 20—

நஞ்சு கலந்த பண்டத்தை உட்கொண்டதன் விளைவாக 53 பேர் சென்னையில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலருடைய நிலை கவலைக்கிடமாக உள்ளது.

# கதை முடிந்து விடவில்லை---வரலாறு தொடரும்!

## பொறுமையை விடுத்துப் புதுப் பொலிவினைப் பாரீர்!

## காங்கிரசுக் கட்சியினரின் தரங்கெட்ட போக்கு-- கி. மனோகரன் கண்டன முழக்கம்

"பதினைந்து மாத காலத்தில் படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்த தி. மு. க.-வுக்குப் பாராட்டு இல்லை ; அதைத் தொடர்ந்து தமிழகம் முழுமைக்கும் கொண்டுவருவதற்காகத் தீட்டப்படும் திட்டங்களுக்கு வரவேற்பு இல்லை ; சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்னும் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய தி. மு. க. அரசுக்குப் பாராட்டு இல்லை.

"ஆனால், கொள்முதலில் தீவிரம் காட்டிப் பட்டினிச் சாவிலிருந்து மக்களைக் காப்பாற்றியதற்குக் கண்டனம்தான் கிடைக்கின்ற பரிசு!

"ஆட்சிக்கு வந்த ஒன்றிரண்டு திங்களுக்குள்ளாக ரிசர்வ் பாங்கியிலிருந்து முன்னைய அரசு வாங்கியிருந்த 'ஓவர் டிராப்டு' பணத்தைத் திருப்பித் தந்துவிட்ட திறமை பற்றி மாநில அரசியல் வட்டாரத்தில் மவுனம்தான் நிலவுகிறது!

"வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இரு மொழிக் கொள்கைத் தீர்மானத்தை துணிந்து நிறைவேற்றிய தமிழக அரசின் போக்கால்--அரசியல் நோக்கால் காக்கப்பட்டுவிட்ட அரசியல் அமைதிக்கு, பூச்செண்டுக்குப் பதிலாகப் பாறுங்கல்தான் பார்வைக்கு வைக்கப்படுகிறது!

"எந்தத் தெளிவுள்ள அரசியல்வாதியும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் கையாளும் தி. மு. க.-வின் அணுகுமுறையைக் காங்கிரசுக் கட்சியினர் பரிகசிக்கிறார்கள்! 'எதற்கெடுத்தாலும் துப்பாக்கி' எனும் முந்தைய நிலையை மாற்றி, 'கலந்து பேசுவோம் ; தீர்வு காண்போம்' எனும் புதிய நெறிக்குச் சமாதி கட்டிடக் காங்கிரசு முயலுகிறது!

"ஆலை அரசர்கள் கதவடைப்புச் செய்யும்போது, 'எல்லாம் அவன் செயல்' என்று விட்டுவிட்டு வேடிக்கை பார்த்த நண்பர்கள், கதவடைப்புச் சத்தமே கேட்காமல் காரியங்கள் தொடர்ந்து நடக்கப் பொறுப்பேற்ற இன்றையத் தலைமையைக் கேலி செய்கிறார்கள்!

"பாராட்டுகிற பண்பு காங்கிரசுக் கட்சிக்கு இல்லையானாலும், படை திரட்டும் போக்கே அவர்களது முடிவாக இருக்கிறது!

"எதையும் தாங்கும் இதயம் படைத்த நாம், கடமை உணர்ச்சியோடு பணியாற்றுவோம்! விழிப்பாகவும் உன்னிப்பாகவும் இருக்க முயலுவோம்! எந்தக் கட்சி ஆட்சியானாலும், அது சில நெருக்கடிகளைச் சந்தித்துத்தான் தீரவேண்டும்!"

என்று, நாடாளுமன்ற தி. மு. க. குழுத் துணைத் தலைவர் கி. மனோகரன் அவர்கள், திருச்சி நகரமன்றத் திடலில் 8—6—68 அன்று நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"சென்ற பொதுத் தேர்தலின் போது சுழன்றடித்துவிட்ட பெரும் சூறவளியில் காங்கிரசுக் கட்சியின் நெடுமரங்கள் அடி பெயர்க்கப்பட்டுவிட்டன! சூறைக் காற்றில் சிக்கிக் கொண்டவர்கள், இன்றைக்கு எதிர்க் கட்சியாக உருமாறியுள்ளனர்! திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆளுங்கட்சியின் தகுதியைத் தந்து மகிழ்ந்திருக்கிறார்கள்!

சனநாயகப் பரிசோதனையில் ஈடுபட்ட தமிழகம், இந்தியத்துணைக் கண்டம் பெற முடியாத அளவுக்கு ஒரு புதிய பாரம்பரியத்தைப் பெற்றுக் கொண்டது! 'இரண்டே கட்சிகள்' என்ற நிலையை சனநாயக வழிமுறையிலே உருவாக்கி, 'ஆட்சிக் கட்சி—அதற்கு எதிராக எதிர்க் கட்சி' என்ற வரையறையை வகுத்து வழங்கிற்று! இது, மக்கள் மன்றம் அளித்த தீர்ப்பு! மரியாதையாக வென்றவனும் தோற்றவனும் இதை ஏற்றுக் கொண்டு தீரவேண்டும்!

சிறிது நாட்களாகத் தமிழகத்தின் அரசியலில் வன்முறைச் செயல்கள் புகுந்திருக்கின்றன! தலையை எண்ணிப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணும் பணியை விட்டுவிட்டு, இற்று விழுகின்ற தலைகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துப் பரிகாரம் காணும் போக்குக்குப் பாதிக்கப்பட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் உற்சாகம் தருவது, வேதனைக்குரியது மட்டுமல்ல—பலத்த கண்டனத்துக்கும் உரியதாகும்!

அரசியலில் விதவைகளாக்கப் பட்டவர்கள், தி. மு. கழகத்தின் புதிய பொலிவினைக் கண்டு பொறுமைப்படுவது இயற்கையாக இருக்கலாம் ; ஆனால் அவர்கள், ஒன்றைப் புரிந்து கொள்வது நல்லது.

இந்த இயக்கம், முந்தாநாள் தோன்றி—நேற்றைக்கு வளர்ந்து—இன்றைக்கு ஆட்சிக் கட்சியாகிவிட்ட அமைப்பு அல்ல ; கடந்த 20 ஆண்டுக் காலமாக தி. மு. கழகம், காலத்தின் கட்டளையை ஏற்றுத்தியாக வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறது!

கட்டி முடிக்கப்பட்ட தி. மு. கழக மாளிகையின் அடிப்பீடத்தில் கொட்டிக்கிடக்கும் கெட்டியாகி விட்ட இரத்தத் துணுக்குகள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தியாகத்தை உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது!

வண்ணைப் பாண்டியனும், உடையார்பாளையம் வேலாயுதமும், நெல்லிக்குப்பம் மஜீதும், ஆலந்தூர் சின்னானும், இன்னும் அவர்களைப் போன்ற எண்ணற்றோரும், தி. மு. க.-வின் இரத்தச் சாட்சிகள்!

தமிழகத்தின் வீதிகளில் அமைதி காத்து நிற்கும் கல்லறைகளில் மவுனம் சாதித்துவிட்ட அந்தத் தியாகச் சீலர்கள், தி. மு. க.-வினுடைய வளர்ச்சியை எண்ணி மகிழ்ந்திருக்கக்கூடும்!

செல்வாக்குப் பெற்ற தனிப் பெரும் ஆட்சிக் கட்சியாகத் தி. மு. கழகம் உயருவதற்கு இலட்சோபலட்சம் மக்கள் தங்களது காணிக்கைகளை வழங்கியிருக்கிறார்கள்! அந்தக் காணிக்கைகளின் மொத்த வடிவம்தான் இந்தத் தி. மு. க.!

உயிர்க் களை நிரம்பிய இந்த இயக்கத்தில், 'என் கதை முடிந்து போயிற்று' என்ற வரலாற்றுக்கு இடமில்லை! 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற முழக்கமே வழிகாட்டியாக அமையவேண்டும்!

பாராளுமன்றத் துணைத் தலைவனாகிய நானும், 'நம் நாடு', 'முரசொலி', 'மாலைமணி' இதழ்களை விலை கூவி விற்கும் செய்திப் பையனும் இந்த இயக்கத்தின் தேவையான சக்திகள்—மறுதளிக்க முடியாத உணர்ச்சிகள்!

கூட்டாக இணைந்து—இதயங்களின் பிணைப்போடு—குடும்பப் பாசம் மிக்க சீரிய தலைமையின் கீழ் நமது இயக்கம் கம்பீர நடை போடுகிறது!

பதினைந்து மாத கால ஆட்சியில்—பொதுமக்கள் மத்தியில்—நம்பிக்கையை உருவாக்கிவிட்ட கட்சியாக தி.மு.க. இருக்கிறது! மெத்த சிரமத்திற்கு மத்தியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள் நாம்!

பொறுப்பேற்று ஆட்சிமன்றத்தில் நுழைந்தபோது, சுழற்ற வேண்டிய நிர்வாக இயந்திரத்தின் பல் சக்கரங்கள் உடைந்து காணப்பட்டன! முடமாக்கப் பட்ட பொருளாதாரம் பயமுறுத்திக் கொண்டிருந்தது! உணவுப் பஞ்சம் கோரத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது! 'எந்த நேரத்திலேயும் இந்த மாநிலம் பொருளாதாரத் துறையில் திவாலாகி விடும்' என்று அச்சமூட்டும் கொடுவாள், தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தது! ஆட்சி அனுபவமற்ற நிலையில், தி. மு. கழகம் பொறுப்பேற்றுக் கொண்டது! தென்னகத்தின் தளநாயகர்—தானைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், நம்பிக்கையோடு பயணம் மேற்கொண்டார்.

பதினைந்து மாத காலத்தில், 'உங்களுடைய சாதனை எங்கே?' என்று கேட்கிற காங்கிரசாருக்கு ஒரு கேள்வி—மேடுபள்ளங்களும், சரிகட்டி--பழுது பார்க்க வேண்டியவற்றைப் பழுது பார்த்து--துருப்பிடித்து விட்ட இயந்திரங்களைத் தூசு துடைத்துத் தன்னை நிலைநாட்டிக் கொள்ளவே பத்தாண்டுகளுக்கு மேலாகும்!

ஆட்சியிலிருந்த காங்கிரசுக் கட்சியினர் விட்டுச் சென்ற கவலைக்குரிய பாரம்பரியங்களைச் சுமந்து தீரவேண்டிய சடம் தோள்களுக்குச் சொந்தக்காரர்களாக நாம் துரத்தப்பட்டோம்!

'படி அரிசி' போடுவதற்கு இலாயக்கற்றவன், 'படி அரிசி' அளப்பவனைப் பார்த்துப் பரிகசிக்கக் கூடாது! உண்மைகளை ஒப்புக் கொள்ளுவதுதான் விவேகம்!"

## கடமையாற்றிடும் காவல் துறைக்கு உறுதுணையாக இருந்திடுவீர்!

★

"சமூகத் தோழர்களை மட்டுமன்றி எல்லாக் கட்சித் தோழர்களையும் கேட்டுக்கொள்வேன் — தீயிடும் தீயவர்களைப் பிடிக்கக் காவல் துறையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் ; 'அவர்களால் இது முடியுமா' என எண்ணவேண்டியதில்லை!

"முகமூடித் திருடர்கள் உலவிய போது, 'முடியுமா இந்தப் போலீசால்?' என்று—நிதானத்திற்குப் பெயர்பெற்ற 'இந்து' ஏடுகூட எழுதியது! ஆனால், இந்தியத் துணைக்கண்டமே பாராட்டும் வகையில், அந்த முகமூடித் திருடர்களைப் பிடித்தது—தமிழகப் போலீசுப் படை!

"அந்தப் படையினருக்கு உதவியாக இருந்து பொதுமக்கள் பணியாற்ற வேண்டும். நீங்களும், காவல் துறையினர் போல் உங்கள் பகுதியில் முறை போட்டுக் கொண்டு ரோந்து வரவேண்டும்.

"காவல் துறையினர் என்றால், 'குறைந்தபட்சம் கையில் ஒரு தடியாவது வேண்டாமா' என்று கம்புகளுடன் ரோந்து வரவேண்டாம் ; யாரையும் தண்டிக்கவோ, விசாரிக்கவோ முற்பட வேண்டாம் ; அதைப் போலீசார் கவனித்துக்கொள்வார்கள்.

'நீங்கள் வெறுங் கரத்துடன் -- உள்ள உறுதியுடன் காவல் புரிந்து வாருங்கள்! பீதியை விட்டொழியுங்கள்! பீதி பரப்பும் முயற்சியைத் தடுத்து நிறுத்துங்கள்! துன்பம் வரும்போது துணிவுடன் நின்று பணியாற்றுங்கள்! காவல் துறையினரின் பணிக்கு ஒவ்வொரு வகையிலும் உதவிபுரியும் முறையில் முழுமூச்சோடு பணியாற்றுங்கள்!"

-- மு. கருணாநிதி

(சென்னை 59-வது வட்டக் கூட்டத்தில்)

## சுப்ரமணியத்தின் செப்பிடு வித்தை!

### எஸ். எஸ். மாரிசாமி அம்பலமாக்குகிறார்!

கோவை, ஜூன் 20—

"ஏழைகளுக்குப் படி அரிசி போடும் அண்ணாவின் ஆட்சியைப் பார்த்து, 'ரேஷனை எடு ; கண்ட்ரோலை எடு' என்று சி. சுப்பிரமணியம் கூறிவருகிறார். இதை உண்மையிலேயே அவர் உணர்ந்து பேசினால், அதை நான் வரவேற்பேன் ; ஆனால், இதை அவர் அரசியலுக்காகப் பேசுகிறார்!

"அவர் அ[illegible] இருந்தபோது, 'ரேஷனை எடு ; கண்ட்ரோலை எடு' என்று நான் நாடாளுமன்றத்தில் முறையிட்டேன் ; அப்போது, 'முடியாது' என்று கர்ணகடூரமாக அவர் பதில் சொன்னார் ; இப்போது அரசியல் செப்பிடு வித்தை ஆடுகிறார்!"

என்று 16--6--68-ல் கோவையில் நடைபெற்ற சுதந்திராக் கட்சி மாநாட்டில், சுதந்திராக் கட்சிப் பொதுச்செயலாளர் எஸ்.எஸ். மாரிசாமி எம்.பி. பேசுகையில் விளக்கினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"தி. மு. க.—சுதந்திரா உறவு ஏழு ஆண்டுகளாக இடைவிடாது செய்த முயற்சியின் பலனாகத்தான் ஏற்பட்டது ; இந்த உறவை, 'எளிதில் பிரித்துவிடலாம்' என்று கருதினாலோ, 'வெட்டிவிடலாம்' என்று நினைத்தாலோ, 'முறித்துவிடலாம்' என்று எண்ணினாலோ அது முடியாத காரியமாகும்!

"இரு கட்சிகளுக்கும் வெவ்வேறு கொடி—கொள்கை—குறிக்கோள் உண்டு ; இவற்றில் ஏதாவது சிறிது வேறுபாடு தோன்றினால், அதை வைத்துத் தங்கள் கடைச் சரக்கை விற்றுவிடலாம் என்று கருதினால் அவர்கள் ஏமாந்துதான்போவார்கள்!

"காங்கிரசுக்காரர்களால் அறிஞர் அண்ணாவின் ஆட்சிக்கு ஏதாவது இடையூறு விளையுமேயானால், அதைப் பார்த்துக்கொண்டு சுதந்திராக் கட்சிக்காரர்கள் சும்மாயிருக்க மாட்டார்கள்!"

## மூன்றுண்டுகளில் 60-'சேனை'கள்!

ஸ்ரீநகர், ஜூன் 19—

கடந்த மூன்றுண்டுக் காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 60-'சேனை'கள் உருவாகியுள்ளனவாம்!

அவற்றில் பல மறைந்துவிட்டன வென்றாலும், 'சிவசேனை' போன்றவை, பதிவுபெற்ற நிறுவனங்களாக இருக்கின்றனவாம் ; வேறு சில, இரகசிய நிறுவனங்களாக இருக்கின்றனவாம் ; இவற்றின் பணிகள்தான், மக்களை, 'தேசிய ஒற்றுமை' என்ற இலட்சியத்திலிருந்து விலக்கி விட்டதாகக் கருதப்படுகிறது.

## இரண்டாம் போகத்துக்கு வீராணத்து நீர்

### அமைச்சர் சாதிக் பாட்சா திறந்து வைத்தார்

### உற்பத்திப் பெருக்கத்தில் அண்ணா காட்டும் அக்கறை

சிதம்பரம், ஜூன் 20—

வீராணம் ஏரி ஆயக்கட்டில் 46,000 ஏக்கர் நிலங்கள் ஒருபோக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது ; உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த 46,000 ஏக்கர் நிலங்களிலும் இருபோக சாகுபடி செய்வதெனத் தமிழக அரசு முடிவு செய்தது.

இரண்டாவதுபோக சாகுபடியில் 'ஆடுதுறை 27' நெல் பயிரிடப்படுகிறது.

இரண்டாவதுபோக சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிடும் விழா, வீராணம் ஏரிக்கரையில் உள்ள கந்தகுமாரன் கிராமத்தில் நடைபெற்றது.

இரண்டாவதுபோக சாகுபடியைத் தொடங்கிவைத்து அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் பேசியதாவது :—

'தமிழக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ள அறிஞர் அண்ணா அவர்கள், விவசாயப் பெருக்கத்துக்கு முதலிடம் கொடுத்துள்ளார் ; அதன் காரணமாகத்தான் இதுவரையில் ஒருபோக சாகுபடியாக இருந்த 46 ஆயிரம் ஏக்கர் நிலமும் இருபோக சாகுபடியாக ஆக்கப்பட்டுள்ளது.

நெல் விளைச்சலைப் பெருக்கத் தேவையான தண்ணீர் — தரமான விதை — போதிய உரம் ஆகியவற்றைத் தந்து இந்த அரசு உதவுகிறது.

இருபோக சாகுபடியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உரம் விதை வாங்கக் கடன் கொடுத்து உதவத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இப்பகுதிக்கு ரூ 10 இலட்சம் விவசாயக் கடன் வழங்கக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் உத்தரவாகியுள்ளது. எவ்வளவு உரம் தேவையானாலும் பெற்றுக்கொள்ளலாம்."

இவ்விழாவுக்கு விவசாய இலாகா அதிகாரி பிரபாகர் தலைமை தாங்கினார்.

மாவட்டக் கலெக்டர் ஜே. எஸ். பாங்கோ அனைவரையும் வரவேற்றார்.

இவ்விழாவில் சழக மாநிலங்களவை மேலவை உறுப்பினர் தில்லை வில்லாளனும் பேசினார்.

## பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட அகதிக் குடும்பங்கள்

ஜூன் திங்கள் முதல் வாரத்தில் 135 பர்மா அகதிக் குடும்பங்கள் திருச்சிக்கு வந்து சேர்ந்தன ; அவர்கள், திருச்சிக்கு அருகிலுள்ள கோட்டப்பட்டு முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

பர்மாவிலிருந்து வெளியேறி வந்த 4,794 குடும்பங்களுக்கு 1964-லிருந்து 1968 வரையில் ரூ. 46,58,280 வழங்கப்பட்டிருக்கிறது ; இவற்றில் 4,000 குடும்பங்கள் திருச்சி மாவட்டத்தில் இருக்கின்றன.

# மொரீஷியஸ் மக்களிடை தமிழ்ப் பண்பாடு

## மறுமலர்ச்சி பெறுவதற்கு நாம் உதவ வேண்டும்

### கண்டு கேட்டறிந்த தகவல்கள்— அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, ஜூன் 20—

"தங்கள் தாய்மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் மெல்ல மெல்ல மறந்துவிட்டிருக்கும் மொரீஷியஸ் வாழ் தமிழ் மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வோமானால், அவர்களிடையே மீண்டும் தமிழ் மொழியையும, தமிழ்ப் பண்பாட்டையும் வளர்க்கமுடியும்; அவர்களும், நம்மிடமிருந்து பல உதவிகளை எதிர்பார்க்கிறார்கள்"

என்று செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், கோட்டையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

அண்மையில் மொரீஷியஸ் தீவுக்குச் சென்று சுற்றுப்பயணம் செய்து திரும்பிய அவர், தாம் கண்டு -- கேட்டறிந்த தகவல்களை விளக்கி மேலும் தெரிவித்ததாவது :—

"மொரீஷியஸ் தீவின மொத்த மக்கள் தொகை 7,18,000; அதில் 1,25,000 பேர் தமிழர்கள்; அவர்களில் 18,000 பேர் இந்துக்களாகவும், எஞ்சியுள்ளோர் கிருத்துவர்களாகவும் உள்ளன. இந்துக்களாக இருந்தவர்கள்தான் நாளடைவில் கிருத்துவ மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

திருக்குறளை பைபிளுக்கு நிகராகக் கிருத்துவர்கள் மதிக்கிறார்கள்; 'திருவள்ளுவர்தான் இயேசு' என்றும் அவர்கள் கூறிக்கொள்கிறார்கள்.

இந்தத் தீவு இயற்கை வளம் நிறைந்ததாகவும், கோடைக்கானல், உதகைபோல் குளிர்ந்த பிரதேசமாகவும் இருக்கின்றன.

இங்கு சென்ற ஆண்டுதான் நெல் பயிரிடத் துவங்கியிருக்கிறார்கள்; பெரும்பாலும் இங்கு விளைவது கரும்பு ஒன்றுதான். கரும்பு இங்கு இயற்கையாக விளைகிறது.

இப்பகுதியில் தமிழ் நாட்டைப் போலவே கோவில்கள் உள்ளன; ஆனால் அந்தக் கோவில்களில்கூடத் தமிழ் முழக்கத்தை கேட்க முடியவில்லை. இந்தக் கோவில்களில் ஒவ்வோராண்டும் தைப்பூசத்தன்று விழா நடத்தப்படுகிறது. இவ்விழாவில் ஏராளமானோர் கலந்துகொள்கின்றனர்.

வடக்கேயிருந்து இங்கு சென்றிருப்பவர்கள் தங்களது மொழியான இந்தியை மறக்கவில்லை; தங்கள் பண்பாட்டைக் கைவிட்டுவிடவில்லை; ஆனால் தமிழின மக்கள்தான் தங்களது தாய் மொழியையும், பண்பாட்டையும் உணருவதில்லை.

அங்கு ஆட்சி மொழியாகப்படுவது பிரெஞ்சு; அடுத்தது ஆங்கிலம்; சுமார் ஆயிரம் பள்ளிகள் இருக்கின்றன.

தமிழ் படிக்க அங்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன; இங்கிருந்து பழனியப்பன் என்ற ஒரு தமிழாசிரியர் அங்கு சென்றிருக்கிறார்; அவருக்கு இந்திய அரசு ஊதியம் அளிக்கிறது.

தமிழ் படிப்பதற்கு வேண்டிய பாட நூல்கள் இங்கிருந்து அனுப்பப்பட்டிருந்தாலும், அங்குள்ளவர்களுக்கு விளங்கக்கூடிய நிலையில் இல்லை; உரல்—அணில்—ஒட்டகம் என்று எழுத்துக்களை கற்பிக்க நாம் அனுப்பும் பாட நூலில் படம் போடப்பட்டு விளக்கப்பட்டுள்ளது; ஆனால் அங்கே உரலும் இல்லை—ஒட்டகமும் இல்லை: ஆகவே, அவர்களது அன்றாட வாழ்வில் பயன்படுத்தக்கூடிய பொருள்களைக் குறிப்பிட்டு விளக்கும் வகையில் அங்குள்ள ஆசிரியர் புதிய பாட நூலைத் தயாரித்து வருகிறார்.

தமிழர்கள் அங்கு மிகுதியாக இருந்தும் அவர்களுக்குத் தமிழில் பேசவும் முடியவில்லை—தெரியவுமில்லை; முதியவர்கள் ஓரிருவருக்குத் தமிழ் பேச முடிகிறது; அதுவும் தட்டுத்தடுமாறித்தான் பேசுகிறார்கள்.

தமிழ்ப் பள்ளிகளில் மாணவர்கள் மூன்றாவது வகுப்புவரையில் தான் படிக்கிறார்கள்; அதற்கு மேல் படிப்பதில்லை; ஏனென்றால், தமிழைப் பயிலுவதால் அவர்களுக்கு எந்தவிதப் பலனுமில்லை என்று கருதுகிறார்கள்.

இங்கு இசைக் கல்லூரி இருக்கிறது; அதில் கருநாடக இசை கற்பிக்கப்படுவதில்லையாம்; பரத நாட்டியமும் கற்பிக்கப்படுவதில்லையாம்; ஆனால், கருநாடக இசை பயிலுவதிலும், பரத நாட்டியத்தைக் கற்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்.

"இசைத் துறையிலும், பரத நாட்டியத் துறையிலும் தேர்ச்சி பெற்ற கணவனும்—மனைவியாக இருவரை இங்கு அனுப்பிவைத்தால், அவர்கள்மூலம் தமிழிசை இங்கு பரவ வாய்ப்பாக இருக்கும்" என்று அங்குள்ளவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

தனிப்பட்டோர் வீடுகளில்கூட டெலிவிஷன்கள் உள்ளன. நம நாட்டில் பொது இடங்களில் வானொலி வைக்கப்பட்டிருப்பது போல் அங்கு டெலிவிஷன்கள் வைத்திருக்கிறார்கள்.

நான் அங்கு கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் டெலிவிஷனில் காட்டப்பட்டன.

உலகத் தமிழ் மாநாட்டின் படத்தை அங்கு திரையிட்டுக் காட்டினோம்; மிகுந்த வரவேற்பு இருந்தது. அந்தப் படத்தைத் தங்களிடமே கொடுத்துவிட்டுச் செல்லுமாறு அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டது.

நம்மிடமிருந்து டாகுமெண்டரி படங்களையும் கேட்டிருக்கிறார்கள்.

தொழிற்கல்விக்கான உபகாரச் சம்பளத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்துமாறு கேட்டிருக்கிறார்கள்.

மேலும், நமது அரசாங்கத்தின் கூட்டுறவுடன் அங்கு நெசவாலை ஒன்றை அமைக்க மிகவும் ஆவல் தெரிவித்திருக்கிறார்கள்.

இவைகளைத் தமிழக அரசு நேரடியாக அவர்களுக்குச் செய்து கொடுத்துவிட முடியாது. அவர்களது வேண்டுகோள்பற்றிநமது முதலமைச்சர் அண்ணா அவர்களுடன் கலந்தாலோசித்துவிட்டு, எதையெதைச் செய்ய முடியுமோ அதை மத்திய அரசின்மூலம் செய்திட முயறசிக்க வேண்டும். அவர்களிடமும் அவ்வாறே கூறிவிட்டு வந்திருக்கிறேன்.

அவர்களது ஆவல் நிறைவேற்றப்படுமானால், நீண்ட காலமாக அங்குள்ள தமிழ் மக்களுக்கும்—நமக்குமிடையே இதுவரையில் இருந்துவந்த இடைவெளி குறைந்து—தமிழுணர்வும் தமிழ்ப் பற்றும் மிகுதியாகும். உறவும் வலுப்படும்: இரு நாடுகளுக்கிடையே நட்புறவும் பெருகும் என்று நம்புகிறோம்."

# சீரணியினருக்கு வேண்டுகோள்

சென்னை, ஜூன் 19—

சீரணித் தனி அதிகாரி க பரமசாமி—சென்னை மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன் ஆகியோர், சென்னை சீரணியினருக்கு கீழ்க்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர் :—

"தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பணியாற்றவும், குடிசைப் பகுதிகளில் காவல் புரியவும், தீயணைக்கும் படையினருக்கு உறுதுணையாக இருந்து தொண்டாற்றவும் வேண்டியது, சீரணியினரின் முக்கியக் கடமைகளாகும்.

"எனவே, சீரணிச் செயலாளர்களுடனும், தொகுதித் தலைவர்களுடனும் கலந்தாலோசித்துச் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து காவல் துறையினருக்கும், தீயணைப்புப் படையினருக்கும் உறுதுணையாக இருந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்."

# 'மணமகள் தேவை'

## பத்திரிகையில் விளம்பரம் செய்த முதல்வர்

பத்திரிகையில் 'மணமகள் தேவை' என்று முதன் முதலில் விளம்பரம் செய்தவர் யார் தெரியுமா?—150 ஆண்டுகளுக்கு முன்பு துணிச்சலான ஜெர்மன் வணிகர் ஒருவர்!

அவர், 'நான்-பார்ட்டிசன் கரஸ்பான்டென்ஸ்' என்னும் பத்திரிகையில் 'அன்பும் மதிப்புமிக்க மணமகள் தேவை' என்று விளம்பரம் செய்தார்; தமது குணநலன்கள் குறித்தும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

இந்த விளம்பரம், ஜெர்மனியை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது; எனினும், அவருக்கு ஓர் அருமையான மனைவி கிடைத்தாள்; அவர் மகிழ்ச்சிகரமாக வாழ்க்கை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து பத்திரிகைகளில் 'மணமகள் தேவை' என்ற விளம்பரங்கள் பெருமளவு தோன்றின.

"திருமணம் புனிதமானது; அதன் புனிதத்தன்மையை பத்திரிகை விளம்பரங்கள் கெடுக்கின்றன" என்ற கூக்குரலும் கிளம்பின!

எனவே, 1856-ஆம் ஆண்டில் பத்திரிகைகளில், 'மணமகள் தேவை' என்ற விளம்பரம் செய்யலாகாது என்று தடை செய்யப்பட்டது.

ஆனால், தனிமையில் வாடிய காளையரும், கன்னியரும் கடுமையாகக் கண்டித்ததால் சில ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத் தடை நீக்கப்பட்டது; எனினும், 'இவ்வித விளம்பரங்களில், ஆட்சேபகரமான சொற்கள் இருக்கலாகாது' என்று நிபந்தனை விதிக்கப்பட்டது. அதனபின் பத்திரிகைகளில் வித விதமான விளம்பரங்கள் வெளிவரத் [illegible].

அந்தக் காலத்தில், 'குடும்பப் பாங்கான' மனைவி தேவை—என்று விளம்பரம் செய்வார்கள்; ஆனால் இன்றோ, 'கட்டுவிடாத உடலமைப்பும், கவர்ச்சிகரமான முகவெட்டும்' கொண்ட கன்னிப் பெண் தேவை—என்று விளம்பரம் செய்யப்படுகின்றன.

"நல்ல குணமும், நிலையான பதவியும் உள்ள மணமகன் தேவை" என்று பெண்கள் விளம்பரம் செய்ய முற்பட்டுவிட்டார்கள்.

# கல்விக் கொள்கையில் கருத்து வேற்றுமை

## காரணம் பற்றித் தகவல்

### முடிவு ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜூன் 18—

மத்திய அரசின் கல்வித் துறை வகுத்துள்ள தேசியக் கல்விக் கொள்கையின் சில அம்சங்கள் குறித்து மத்திய அமைச்சரவையில் தீவிரக் கருத்து வேறுபாடுகள் நிலவுவதால், இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இதன்மீது முடிவெடுப்பது ஒத்திவைக்கப்பட்டது.

அன்றியும், இந்தப் பிரச்சினையின்மீது கருத்துத் தெரிவிக்க விரும்பும் இரு அமைச்சர்கள் இன்றையக் கூட்டத்துக்கு வர முடியவில்லை.

தேசிய வருமானத்தில் 6-சதவிகிதத்தைக் கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்குவது பற்றிய பிரச்சினையில்தான் தீவிரக் கருத்து வேறுபாடாம்!

"கல்விப் பிரச்சினை, மாநில அரசுகள் கவனிக்கவேண்டிய ஒன்றாதலால், இவ்வளவு அதிகமாக நிதி ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை" என்று சிலரும், 'கல்வி வசதியில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று அரசியல் சட்டம் விதித்துள்ள பொறுப்பை நிறைவேற்றி வைக்க இந்த அளவு நிதி ஒதுக்கவேண்டியது அவசியமாகும்' என்று சிலரும் வற்புறுத்துகிறார்களாம்.

கல்வித் துறை வகுத்துள்ள கொள்கையை அமைச்சரவையில் செல்வாக்குவாய்ந்த ஒரு பிரிவினர் ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது.

# மாயூரம் -- மணல்மேடு சமுதாயச் சீர்திருத்த -- விவசாயிகள் மாநாடு

## ஜூலை 12, 13-ம் நாட்களில் நடைபெறும்

மாயூரம்—மணல்மேடு வட்டார விவசாயிகள் சங்கப் பொது உறுப்பினர் கூட்டம் 14—6—68-ல், திரு. என். கிட்டப்பா எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, ஜூலை 12 13 ஆகிய நாட்களில் மாயூரம் - மணல்மேட்டில் நடைபெறும் சமுதாய சீர்திருத்த விவசாய மாநாட்டுக்கு வரவேற்புக் குழுத் தலைவராக திரு. என். கிட்டப்பா எம்.எல்.ஏ. அவர்களும், செயலாளர்களாகத் திரு. சி. கலியபெருமாள், திரு. இரா. சிவப்பிரகாசம் ஆகியோரும், பொருளாளராகத் திரு. வி. கோவிந்தசாமியும், தொண்டர் படைத் தலைவர்களாக திரு. வி. முத்தையன், திரு ஜி. கே. மூர்த்தி ஆகியோரும், விளம்பரக் குழுத் தலைவராகத் திரு. ஜே. ரவியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டுப் பந்தலுக்கு, சாதி ஒழிப்புப் போரில் ஈடுபட்டு உயிர் நீத்த திரு. வெள்ளைச்சாமி பெயரை வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# நெல்லிக்குப்பம் ஏ. கோவிந்தசாமி மன்றம்

நெல்லிக்குப்பம் ஏ. கோவிந்தசாமி மன்ற நிர்வாகிகள் தேர்தல், திரு. வா. வீரராகவன் அவர்களை ஆணையாளராகக்கொண்டு, நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத்தலைவர் : கு கணபதி; செயலாளர் : வா. நடராசன்; துணைச்செயலாளர் : இரா. கோவிந்தராசு; பொருளாளர் : இ. செயராமன்; மற்றும் ஏழுபேர் செயற்குழு உறுப்பினர்கள்.

# பாண்டிச்சேரியில் புதிய மாவு மில்!

இந்தியாவிலேயே மிகவும் புதுமைமிக்க மாவு மில் ஒன்று பாண்டிச்சேரியில் அமைக்கப்படும். இதற்கான ஒப்பந்தம்-பிரிட்டிஷ் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 100 டன் மாவு தயாரிக்கக்கூடிய இந்த மில் பாண்டிச்சேரி அருகில் உருவாகும்; 'ஆரோவில்' என்ற அனைத்து நாட்டு நகரின் தொழில் பகுதியில் கட்டப்படும்.

மிகவும் நவீனக் கருவிகளுடன் கட்டப்படும் இந்த மில்லின் உற்பத்தியை மேலும் அதிகரிக்கவும், சாத்தியக்கூறு உண்டு.

# சென்னை 51-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றம்

சென்னை 51-வது வட்ட (பழைய 41-வது வட்டம்) எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் துவக்க விழா, மே 25-ல் நடைபெற்றது.

16—6—68-ல் நிர்வாகிகள் தேர்தல் வட்டச் செயலாளர் த. ல. கோந்தசாமி முன்னிலையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர்: இரா. திருநாவுக்கரசு; செயலாளர்: க. பழனி; துணைச் செயலாளர்: வேதகிரி; பொருளாளர்: ச. செயராமன்; மற்றும் 7-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

# கட்டுப்பாடில்லாத சர்க்கரையின் விலை

## தமிழக அரசு முடிவு

திருச்சி, ஜூன் 19—

**பெருமளவில் சர்க்கரை பயன்படுத்துவோருக்குப் பகிரங்க மார்க்கெட் (கட்டுபாடு இல்லாத) சர்க்கரை விலையைக் குறைக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.**

**குவிண்டால் ரூ. 365-லிருந்து ரூ. 355 ஆகக் குறையும்.**

**இந்த விலைக் குறைப்பு ஜூன் 23-ல் துவங்கும் சர்க்கரை மாதத்திலிருந்து அமுலுக்கு வரும்.**

**பகிரங்க மார்க்கெட் சர்க்கரை இருப்பு அரசினரிடம் தற்போது போதுமான அளவுக்கு உள்ளது எனக்கூறப்படுகிறது.**

# சென்னை 10-வதுவட்ட கருணாநிதி நற்பணி மன்றம்

15—6—68-ல், சென்னை 10-வது வட்டம் மணிகண்ட முதலி தெருவில், வட்டத் துணைச் செயலாளர் ந. இராசமன்னார் தலைமையில் துணை மன்ற அமைப்புக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது, கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றம்—கே. எஸ். அருணாசலம் இரவுப் பள்ளி என்று பெயரிடப்பட்டது. பின், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : கே. சி. ஆறுமுகம்; செயலாளர் : நா. தமிழன்பன்; துணைச் செயலாளர் : எம். பொன்னன்; பொருளாளர் : எஸ். வி. சிவசங்கரன்; மன்றக் கர்ப்பாளர்கள் : பி. ஏ. என். இராசரத்தினம், ஆர். எம். தங்கவேலு; மற்றும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

# நெல்லிக்குப்பம் சின்னச்சாமி மன்றம்

13—6—68-ல், நெல்லிக்குப்பம் சின்னசாமி மன்ற நிர்வாகிகள் தேர்தல், நகர தி. மு. கழகச் செயலாளர் மு. கலியபெருமாள் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர்: துரை. கிருட்டினமூர்த்தி; செயலாளர்: துரை. அன்பரசன்; துணைச் செயலாளர்: கோ. பழனிச்சாமி; பொருளாளர்: அ. கிருட்டினமூர்த்தி; நகரப் பிரதிநிதி: தங்க. இராசேந்திரன்; மற்றும் 7-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

வேளாண்மைத்துறை அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி

### நாளை மறுநாள் வீடுதிரும்புகிறார்

சென்னை, ஜூலை 19—

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், 22—6—68 அன்று இல்லம் திரும்புவார் என்று மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

இன்று அண்ணா அவர்களும், பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி, மற்றும் நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்களும், தோழர்களும் அமைச்சர் கோவிந்தசாமி அவர்களைக் கண்டு உடல் நலம் விசாரித்தனர்.

"இல்லத்திற்கு அனுப்பப்பட்டாலும் முழு ஓய்வில் அவர் இருக்க வேண்டும்" என மருத்துவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

## இளமுருகு உடல்நிலை

சென்னை, ஜூன் 18—

கார் விபத்துக்காளாகி காயமடைந்து சென்னை பெரிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திரு இளமுருகு அவர்களின் வலது கையை இன்று எச்ஸ்ரே படம் பிடிக்கப்பட்டது.

அவரை மாண்புமிகு அமைச்சர்கள் சாதிக்பாட்சா, சத்தியவாணி முத்து, எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., அமைப்புச் செயலாளர் என் வி நடராசன் எம்.எம்.சி., பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், பத்மாவதி, ஜீவானந்தம், கோவை மகளிர் மன்ற உறுப்பினர்கள், பாவேந்தர் பாரதிதாசன் குடும்பத்தினர், சின்ன அண்ணாமலை சைவ சித்தானந்தக் கழகச் செயலாளர் சுப்பையா பிள்ளை, தமிழக அரசு துணைச் செயலாளர் முத்துப் பிள்ளை, மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நண்பர்கள் பலரும் வந்து பார்த்து நலம் அறிந்து சென்றனர்.

## புலவர் அறிவுடைநம்பி

**சுற்றுப்பயணம்**

ஜூன் 21: சின்னசேலம்; 22: மாயூரம்; 23: தூத்துக்குடி; 24: சாயர்புரம்; 25: சிவகாசி; 26: வைத்தீசுவரன் கோவில்; 27: ஆலக்கிராமம்; 29: மதுரை; 30, ஜூலை 1, 2, 3: தென்காசி; 5: ஆர். எஸ். மங்கலம்; 6: ஒட்டன்சத்திரம்; 7: வந்தவாசி; 12: மணல்மேடு (சமுதாய சீர்திருத்த மாநாடு); 13: பந்தநல்லூர்; 14: பட்டுக்கோட்டை (தளிக் கோட்டை).

# தீ விபத்துக்களைத் தவிர்க்கும் வழிமுறைகள்

## குடிசைவாழ் மக்கள் கவனிக்க:

சென்னை, ஜூன் 19—

தீயணைக்கும் படை இயக்குநர், பின்வரும் தகவல்களைக் குடிசைவாழ் மக்களுக்குத் தெரிவிக்கிறார்:—

1. ஒவ்வொரு நாள் காலையிலும் குடிசையின் கூரை வெளிப் பகுதியை—முக்கியமாகக் கீற்று ஓலைகளின் இடைவெளியை நன்ருகச் சோதித்துப் பார்க்கவேண்டும். ஈரத் துணியில் அல்லது காகிதத்தில் அல்லது மாட்டுச் சாணத்தில் சுற்றி ஏதாவது வைக்கப்பட்டிருந்தால் அதனை அப்படியே அகற்றிப் பானைத் தண்ணீரில் போட்டு வைக்கவேண்டும்; அதன் பின்பு போலீசாரிடம் அல்லது ஊர்க்காவல் படையினரிடம் அல்லது தீயணைக்கும் படையினரிடம் ஒப்படைக்க வேண்டும்.
2. முடிந்தால் கூரையின் வெளிப் பகுதிகளைப் பழைய தகடுகளால் மூடி வைக்கலாம்; தீ பரவாது இது தடுக்கும்.
3. குடிசைப் பகுதிகளில் அவ்வப்போது பெரிய தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்படுகிறது. இந்தத் தண்ணீரைத் தீயை அணைக்க மட்டுமே பயன்படுத்தவேண்டும். இந்தத் தொட்டிகளில் தண்ணீர் எப்போதும் நிரம்பி இருக்குமாறு கவனித்துக்கொள்ள வேண்டும்.
4. குடிசைப் பகுதிகளில் கொக்கிக் கம்புகள் தரப்படுகின்றன. தீப் பிடித்தவுடன் எரியும் கூரையைக் கீழே இழுத்துத் தள்ள இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
5. தீயணைக்கும் சாதனமொன்றைக் குடிசையில் வைத்திருக்க வேண்டும். பயிற்சி பெற்ற தீயணைக்கும் படையினர் ஒவ்வொரு முக்கிய குடிசைப் பகுதிகளிலும் நிறுத்தப்படுகின்றனர்.
6. பக்கத்தில் தீப் பிடித்தவுடன் பாதிக்கப்படாத குடிசைகளை இழுத்துத் தள்ளத் தயங்கலாகாது. இது தீ பரவாது தடுக்கும்.

★

## கி. மனோகரன் தந்தி—இந்திரா காந்தி பதில்

சென்னை நகரில் தீ விபத்துக்களினுல் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலைமையமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கணிசமான தொகை அனுப்புவதாகத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

சென்னை நகரில் உள்ள தனது தொகுதி மக்களுக்கு தீ விபத்துக்களால் ரூ. 10 இலட்சத்துக்கு மேல் நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க உதவுமாறும் திரு. கி. மனோகரன், தலைமையமைச்சரிடம் தந்தி மூலம் கோரியிருந்தார்.

திரு. கி. மனோகரனுக்குத் தலைமையமைச்சரிடமிருந்து புதனன்று கீழ்க்கண்ட பதில் கடிதம் வந்தது:—

"சென்னை நகர தீ விபத்துக்கள் பற்றிய உங்களுடைய 15-ந் தேதி தந்தி கிடைத்தது.

"பாதிக்கப்பட்ட குடும்பங்கட்கு உடனடியாகத் தக்க நிவாரணம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டு தங்கள் கோரிக்கையை தமிழகக் கவர்னருக்கு அனுப்பிவைக்கிறேன்."

★

## சமூக விரோதச் செயல்

### இதுவரை 250 பேர் கைது

சென்னை, ஜூன் 19—

சென்னையில் கடந்த ஒரு வார காலமாக ஏற்பட்டுவந்த தீவிபத்துக்கள் தொடர்பாக இதுவரை 250 பேர் வரை போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

"கைது செய்யப்பட்டுள்ளவர்கள் சமூக விரோதச் சக்தி" என்று போலீசுத் தரப்பில் கூறப்படுகிறது.

## முரசொலி மாறன் அமெரிக்கா பயணம்

### அனைத்துநாட்டுக் கருத்தரங்கில் கலந்துகொள்கிறார்

சென்னை, ஜூன் 20—

அமெரிக்காவிலுள்ள ஹார்வேர்டு பல்கலைக்கழகம் நடத்தும் அனைத்து நாட்டுக் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பொருட்டு நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் முரசொலி மாறன் எம்.ஏ. அவர்கள், 24—6—68 பிற்பகல் 2-30 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்டுச் செல்லவிருக்கிறார்.

40 நாடுகளைச் சார்ந்தவர்கள் பங்கேற்கும் இந்தக் கருத்தரங்கில் இந்தியாவின் சார்பில் முரசொலி மாறன் பங்கேற்கிறார். ஜூலை 2-ம் நாள் துவங்கும் இந்தக் கருத்தரங்கம் ஆகஸ்டு 23-ம் நாள்வரை நடைபெறுகிறது.

இதற்கான செலவுகளை அந்தப் பல்கலைக்கழகமே ஏற்றுக்கொள்ளுகிறது.

## மணல்மேடு சமுதாயச் சீர்திருத்த—விவசாய மாநாடுகள்

### 'டெண்டர்'கள் அறிவிப்பு

"மாயூரம் மணல்மேட்டில் ஜூலை 12, 13 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் சமுதாயச் சீர்திருத்த—விவசாய மாநாடுகளுக்குரிய பந்தல், கொட்டகை ஆகியவை அமைப்பதற்கான 'டெண்டர்', மணல்மேடு மாநாட்டு அலுவலகத்தில், 24—6—68 பிற்பகல் 3-மணிக்கு நேரில் பெற்றுக் கொள்ளப்படும்.

"மாநாட்டுத் திடலில், உணவு—சிற்றுண்டி—தேநீர் விடுதி—குளிர்பானக் கடைகள்—கைத்தறித் துணிக் கடை—புத்தகக் கடை—சைக்கிள் ஸ்டாண்டு ஆகியவை வைத்துக் கொள்வதற்கான கடைகளுக்கு டெண்டர்கள் கோரப்படுகின்றன.

"தேவையான பொறுப்புத் தொகையுடன் டெண்டர்கள் மாநாட்டு அலுவலகத்தில் 24—6—68 மாலை 5-மணிக்குப் பெற்றுக் கொள்ளப்படும்"

என்று, வரவேற்புக் குழுத் தலைவர் என். கிட்டப்பா அறிவிக்கிறார்.

# ஒருமைப்பாட்டுக்கே வேட்டுவைக்கும் பெரிய சக்தி!

"1962-ல் முந்திய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் நடைபெற்றது. சில முக்கியமான நியதிகளை வலியுறுத்தி, 'அவற்றை எல்லோரும் சரிவர நடத்திவைக்க வேண்டும்' என்று அது பணித்தது; ஆனுல், அதற்குப் பிறகு அந்த அடிப்படைகளுக்கு நேர் எதிரிடையாகத்தான் அநேகமாக எல்லாத் துறைகளிலும் வேலைகள் நடந்துவந்திருக்கின்றன.

"இணைப்பு மொழி விஷயத்[illegible] முதலில் எடுத்துக்கொள்வோம்; 'ஆங்கிலம்தான் இணைப்பு மொழியாக நீடித்து இருந்துவர வேண்டும்' என்பது, 1962 ஒருமைப்பாட்டுக் கவுன்சில் முடிவுகளில் முதன்மையானது. 'மத்திய அரசுக்கும்—மாநில அரசாங்கங்க[illegible] இடையே இணைப்பு மொழியாகவும், பல்கலைக் சழக[illegible] பயிற்[illegible] மொழியாகவும் ஆங்கிலம் தொடர்ந்து இருந்துவர வேண்டும்' என்ற முடிவு ஏற்பட்டது. ஆனுல் பிறகு எல்லாம் அதற்கு நேர் எதிர்ாகத்தாள் நடந்திருக்கின்றன.

"பல இந்திப் பிரதேசப் பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டுவருகிறது. தேசமெங்கும் மத்திய சர்க்கார் நடத்தும் பள்ளிகளிலும் மறைமுகமாக அதே முயற்சி நடைபெறுகிறது.

"இந்தி பேசாதோருக்கு அபயமளிப்பதாகச் சொல்லிக்கொண்டு ஆட்சிமொழிச் சட்டத்துக்குச் செய்த திருத்தத்தையடுத்து, மத்திய அரசாங்கப் பணிகளுக்கு நியமன விஷயமாக நிறைவேற்றிய நீதியற்ற தீர்மானத்தினுல் ஏற்பட்ட கொந்தளிப்பு இன்னும் அடங்கவில்லை. அதன் விளைவாக, பள்ளிகளிலேயே இந்தி போதிக்கப்படாத ஒரு நிலைமை சென்னை போன்ற மாநிலங்களில் ஏற்பட நேர்ந்தது துரதிருஷ்டவசமானது.

"பார்லிமெண்டு நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தைப்போல தேசிய ஒருமைப்பாட்டுணர்வுக்கு வேறு எதுவும் வேட்டு வைக்கவில்லை என்பதைச் சொல்லித்தானுக வேண்டும்

"இந்தியை அவசரப்பட்டுத் திணிக்கப் பார்க்கும் ஆர்வந்தான் ஒருமைப்பாட்டை அழிக்கக்கூடிய பெரிய சக்தியாக விளங்குகிறது!"

—'தினமணி' தலையங்கப் பகுதி: (20—6—68)

# குடுகுடுப்பைக்காரரும் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரம் செய்யலாம்

## நாடகம்—தெருக் கூத்து—வில்லுப் பாட்டு மூலமும் தீவிரப் பிரசாரம்

### ஊக்கமளிக்கத் தமிழக அரசின் திட்டம்—அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அறிவிப்பு

உடுமலை, ஜூன் 20—

"கலைத்துறை மூலம் கருத்தடைப் பிரச்சாரம் செய்வோருக்கு உதவிப் பணம் தரப்படும்"

என்று நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா இங்கு தெரிவித்தார்.

உடுமலைத் தொகுதியிலுள்ள கரட்டுப்புதூரில் கட்டப்பட்ட கட்டிடத்தைத் திறந்துவைத்து அமைச்சர் சாதிக் பாட்சா பேசுகையில் இத்தொடர்பில் மேலும் கூறியதாவது:—

"குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்தைத் தீவிர்மாகச் செய்ய முயற்சி செய்துவருகிறோம். நாடகம், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு ஆகியவை மூலம் இதைச் செய்யலாம்.

"கருத்தடைப் பிரச்சார நாடகம் தயாரித்தால் அரசு ரூ. 300 உதவிப் பணம் அளிக்கும்.

கருத்தடையைப் பரப்பும் தெருக்கூத்துக்கும் ரூ. 100 தரப்படும்.

இதேபோன்று குடுகுடுப்பைக்காரர்களும் கருத்தடைப் பிரச்சாரம் செய்ய முன்வந்தால் பண உதவி செய்யலாம். இது பற்றி ஒரு திட்டம் தயாரிக்க முடிவு செய்துள்ளோம்."

ரோஜா பாக்கு & புகையிலை

REGD. NO. 118331 ROJA

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**21—6—68**

**தஞ்சை**

21-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு கீழவாசல் கவாஸ்காரத் தெருவில்; தலைவர்: கே, தருமராசன்; பேசுவோர்: வெ. கண்ணன், பி. மாணிக்கவாசகம், டி. கே. கோவிந்தன் எம்.சி., கு. சுல்தான் எம்.சி., மற்றும் பலர்.

**தாரமங்கலம்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு தண்டிகேசுவரன் சாவடி மைதானத்தில்; தலைவர்: கே. பி. குப்புசாமி; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், கே. ஆர். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., சி. பழனி எம்.எல்.ஏ., கன்னியப்பன், அ. பாலு, டி. சி. அரங்கசாமி, டி. சி. குமாரசாமி.

**சென்னை 84-வது வட்டம்**

திருவள்ளுவர் பொதுப் பணி மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மயிலாப்பூர் சீனிவாச ராவ் தோட்டத்தில்; தலைவர்: மா. குப்புசாமி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், என், வி. நடராசன் எம்.எல்.சி., இராம. இரங்கண்ணல் எம்-எல்.ஏ., சிட்டிபாபு எம்.பி., கே. கோவிந்தசா எம்.சி., எஸ். வி. வேலு, எம். நாகப்பன்.

## குழந்தைகள் பள்ளி திறப்பு விழா

சென்னை—இலக்குமிபுரம் ஐயாவு நாயுடு தெருவில், 21—6—68 காலை 9-30 மணிக்கு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வள்ளியம்மாள் குழந்தைகள் பள்ளியைத் துவக்கிவைப்பார்; மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமை வகிப்பார்.

## எஸ். டி. சோமசுந்தரம்

**சுற்றுப்பயணம்**

ஜூன் 22, 23: தென்காசி; 24 29: ஒரத்தநாடு தொகுதி.

## பாகிஸ்தானுக்கு பெல்ஜியத்திலிருந்து இராணுவத் தளவாடங்கள்

### இந்திய அரசின் எதிர்ப்பு

புதுடில்லி, ஜூன் 19—

'நேட்டோ' இருப்பில் மிகுதியாக உள்ள பேட்டன் டாங்கி போன்ற இராணுவத் தளவாடங்களை, பாகிஸ்தானுக்கு பெல்ஜியம் விற்பதற்கு இந்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இத்தளவாடங்களை இத்தாலியிருந்து பெற பாகிஸ்தான் முயன்றது; ஆனுல், அதற்குச் சிறிது காலதாமதம் தேவைப்படும் என்பதால் பெல்ஜியத்திடமிருந்து பெற பாகிஸ்தான் முயலுவதாகக் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.